**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**
**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**
**மோ.வா.வி.கோ.மனு எண். 185/2018**

பெயர் – திரு.கோபால் ம.சா.2.

த/பெ –

கிராமம் –

தாலுகா –

தொழில் –

ஜாதி –

மதம் –

வயது –

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2023ம் ஆண்டு ஜூன் திங்கள் 23–ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை : –

நான் இந்த மனுவில் மைனர் மனுதாரருக்கு அப்பா. எனது சாட்சியத்தை நிரூபண உறுதி கூற்றாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது.

1. எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.15**

**2ம் எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை மனுதார் தான் கொடுத்தார் நான் கொடுக்கவில்லை அவர் என்ன புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமகா இந்த நீதிமன்றம் தவிர வேறு எங்கும் நான் சாட்சியம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மனுதார் செந்தில்முருகன் என் வீடு பக்கத்து வீட்டுக்காரர். விபத்து நடந்த ரோடு திருச்செந்தூர் – கன்னியாகுமரி மெயின் ரோடு. அந்த ரோடில் கார், பஸ், அதிகமாக போகும் என்றால் சரிதான். பக்கத்தில் கடைகள், ஐஸ் கம்பெனி உள்ளது என்றால் சரிதான். இந்த விபத்தை நான் சத்தம் கேட்டு தான் பார்த்தேன் என்றால் இல்லை. போக்குவரத்து நிறைந்த மெயின் ரோட்டில் 6 வயது

A BARSAD BEGUM Digitally signed by A BARSAD BEGUM Date: 2023.06.23 19:29:34 +0530

குழந்தையை தனியாக விடுவது தவறு என்றால் சரிதான். நான் மேற்படி விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் பார்க்காத சம்பவத்தை பார்த்த மாதிரி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை

A BARSAD BEGUM Digitally signed by A BARSAD BEGUM Date: 2023.06.23 19:29:40 +0530